# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி – 27 | 11-03-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 21







# தமது வர்த்தகக் கப்பல் மூழ்கடிப்பிற்கு விடுதலைப் புலிகள் பலத்த கண்டனம்!

**அமைச்சர் மாரப்பனவிற்கு தமிழ்ச்செல்வன் கடிதம்**

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பலை சிறிலங்கா கடற்படையினர் மூழ்கடித்தது தொடர்பாக தமது பலத்த கண்டனத்தை வெளிப்படுத்தி அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இக் கடிதத்தில் இச் செயலானது புரிந்துணர்வு உடன்பாட்டை மீறிய கொடூரமான செயல் எனவும் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் இன்று (10.03.2003) திருகோணமலையில் இருந்து 220 கடல் மைல் தூரத்தில் நடந்துள்ளது. இச் சம்பவத்தால் எங்களுடைய வர்த்தகக் கப்பல் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கி கடலில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக எங்களின் ஒரு குழு அங்கத்தவர்கள் உயிரைத் தியாகம் செய்துள்ளனர். இச்சம்பவம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறிய ஒரு கொடூரமான செயலாகும். எங்களுடைய கப்பல் சட்ட விரோதமான செயல் எதனையும் புரியவில்லை. இச்சம்பவம் சிறிலங்கா கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட

(08ஆம் பக்கம் பார்க்க)

## பிணையில் விடுவிப்பு!

(கொழும்பு)

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் திருகோணமலை கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் ஆறு பேரை பிணையில் விடுதலை செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவர்களை விடுதலை செய்வது தொடர்பாக சட்டமா அதிபர் இணக்கம் தெரிவித்த பின்னர் இந்த தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை

(08ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச கடற்பரப்பில் புலிகளின் கப்பல் சிறிலங்கா கடற்படையால் தாக்கி மூழ்கடிப்பு!

## கப்டன் உட்பட 11 புலிகள் வீரச்சாவு

**இலங்கையின் கரையோரத்திற்கு 220 மைலுக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் ஒன்று சிறிலங்காப் படையின் தாக்குதலுக்கு உள்ளாகி மூழ்கியது. இதில் இருந்த கப்பல் கப்டன் உட்பட 11 விடுதலைப்புலிகள் வீரச்சாவடைந்தனர்.**

நேற்றுக் காலை 10.00 மணிக்கு இவ் அனர்த்தம் நிகழ்ந்தது. திருகோணமலைக்கு கிழக்கே 220 கடல் மைல்களுக்கு அப்பால் இச்சம்பவம் இடம்பெற்றது.

சர்வதேச கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பலை சிறிலங்கா யுத்தக் கப்பல் ஒன்று வழிமறிக்க முயன்றதாகவும், அதனைப் பொருட்படுத்தாது கப்பல் பயணிக்கையில் சிறிலங்கா கடற்படைப் போர்க்கப்பல் தாக்கி மூழ்கடித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கு உள்ளான கப்பல் முதலில் தீப்பற்றி எரிந்ததாகவும் பின்னர் கடலில் மூழ்கியதாகவும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக மன்னாரில் நேற்றுப் பேரணி

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதற்கு கண்டனம் தெரிவித்து மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மன்னார் மத்திய மைதனத்தில் இருந்து ஆரம்பமாகி மன்னார் செயலகத்தைச் சென்றடைந்துள்ளது.

இப் பேரணியில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# எக்கப்பலுக்கும் சர்வதேசக் கடற்பரப்பில் சுதந்திரமாகச் செயற்படும் உரிமை உண்டு

**கண்காணிப்புக்குழு உப தலைவர்**

எல்லாக் கப்பல்களுக்கும் அது எங்கிருந்து வந்தாலும் சர்வதேசக் கடற்பரப்பில் சுதந்திரமாகச் செயற்பட உரிமை உண்டு என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உப தலைவர் ஒக்லண்ட் பி.பி.ஸி.க்குச் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கப்பல் மீதான சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதல் குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உப தலைவர் ஒக்லண்ட் மேலும் தெரிவிக்கையில்; கப்பல் எப்பகுதியில் நின்று கொண்டிருந்தது என்பதை என்னால் உறுதிப்படுத்தவோ,மறுக்கவோ முடியாது. சிறிலங்கா கடற்படையிடம் இருந்து வந்த தகவல் இந்தக் கப்பலில் அது எந்த நாட்டை சேர்ந்தது என்பதைக் காட்டும் கொடியோ மற்றைய அடையாளங்களோ இல்லை என்பது தான் என்றார்.

ஆனால், இலங்கை கடல் எல்லைக்குள் வராது சர்வதேச கடற்பரப்பில் சென்று கொண்டிருக்கும் கப்பலை கடற்படை எப்படித் தாக்க முடியும். அது சர்வதேச சட்டத்தின் கீழ் சரியான நடவடிக்கைதானா? என்று கேட்டபோது,

இந்தக் கேள்விக்கும் என்னால் அவரசப்பட்டு எந்த முடிவுக்கும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ வரலாறு

## தேர்வில் வெற்றியீட்டியோருக்கு வரும் சனியன்று பரிசளிப்பு!

தமிழீழ வரலாற்றுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களிற்கான பரிசில் வழங்கும் நிகழ்வு வரும் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கிளி.கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் வெற்றியீட்டிய மாணவர்கள் அனைவரையும் அன்றைய தினம் நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அறிவித்துள்ளார். மேற்படி தேர்வில் வெற்றி பெற்றோரின் பெயர் விபரங்கள் ஏழாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

(பா)

# களுத்துறை தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவாக நாளை மறுதினம் மன்னாரில் மறியல்

களுத்துறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக நாளை மறுதினம் பரந்தளவில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதற்கு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்கள் ஏற்பாடு செய்துள்ளன.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களை விடு

(08ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு எதிராக

# பொ.ஐ.முன்னணி – ஜே.வி.பி. இணைந்து கொழும்பில் நடத்திய கண்டனப் பேரணி!

(கொழும்பு)

சிறிலங்கா ஆளும் அரசின் சமாதான முயற்சி, அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டம் என்பனவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக எதிர்க்கட்சியினரால் கொழும்பில் நேற்று பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றும், கூட்டமும் நடத்தப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஜே.வி.பி.யின் ஆதரவாளர்கள் இன்றைய ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.

கன்டஸ் பூங்காவிலிருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் கொழும்பு நகர மண்டப மைதானத்தை சென்றடைந்தது. அங்கு பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டர் ஆசிரியர் போராட்டம் கிளிநொச்சியில் தொடர்கின்றது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலய தொண்டர் ஆசிரியர் சங்கத்தினரின் சாத்வீகப் போராட்டம் வலயக்கல்விப் பணிமனை முன்பாகவும், அரச செயலகம் முன்பாகவும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

கடந்த 4ஆம் திகதி முதல் 6ஆந் திகதி வரை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த தொண்டராசிரியர்கள் 7 ஆந்திகதி முதல் வலயக்கல்விப் பணிமனை, அரச செயலகம் முன்பாக சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுடன் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கப்பெறும் வரை தொடர்ந்தும் சாத்வீகப் போராட்டத்தில் இறங்கியுள்ளதாக தொண்டர் ஆசிரியர் சங்க செயலாளர் சதீஸ் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இவர்கள் பாடசாலைப் புறக்கணிப்புப் போராட்டத்திலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

(சோ)

## கிளி. அரசாங்க அதிபரின் புதிய காரியாலயம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)



கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் புதிய காரியாலயம் நேற்று பகல் 12.00 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் அவர்களால் நாடாவினை வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் அரச அதிபர் காரியாலயம் கணக்காளர் திணைக்களத்திலும், புனர்வாழ்வு அமைச்சுக் காரியாலயங்களின் ஒரு பகுதியிலும் இயங்கிவந்தது.

நேற்று முதல் அரச அதிபரின் காரியாலயம் கிளி. அரச செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் இயங்கி வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

## வகுப்புகள்

(அலுவலக செய்தியாளர்)

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி வகுப்புக்கள் எதிர்வரும் 15ம், 16ம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள இப்பாடநெறி வகுப்புகளுக்கு கிளிநொச்சி பிராந்திய நிலையத்தில் பதிவு செய்த பகுதி 1, பகுதி 11 மாணவர்களை தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் சிரேஷ்ட விரிவுரையாளர் கி.சின்னராசா வேண்டுகை விடுத்துள்ளார்.

(சோ)

## –கிளி. இந்துக் கல்லூரி மாணவிக்கு – அகில இலங்கை ரீதியிலான கட்டுரைப் போட்டியில் 2ஆம் இடம்

(அலுவலக செய்தியாளர்)



2003ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் விவகார அமைச்சினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 11ஆம் ஆண்டு மாணவியான செல்வி சிந்துஜா மரியநாயகம் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் கனிஷ்ட பிரிவில் கட்டுரைப் போட்டிக்குத் தோற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

"நல்லொழுக்க சீர்கேட்டில் தொடர்பூடகங்களின் தாக்கம்" எனும் தலைப்பில் எழுதப்பட்ட மேற்படி கட்டுரை; கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளது. கடந்த 8ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து மகளிர் அமைச்சரினால் இவர் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கிக்கௌரவிக்கப்பட்டார்.

(சோ)

## கண்டெடுப்பு

அக்கராயன் வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் செல்வி. நாகம்மா - கந்தையா அவர்களால் அக்கராயன் 33 வீட்டுத்திட்ட அருகாமையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட தங்கமோதிரம் ஒன்று அக்கராயன் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைக் காண்பித்துப் பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம் – முல்லைத்தீவு

வழ.இல.361/02
தன்மை: மணநீக்கம்

வரதராஜன் சுகந்தா
மே/பா.சி.திலகராஜா
1ஆம் கண்டம் வலதுகரை
காணி இல 63
முத்துஐயன்கட்டு.
வழக்காளி

எதிர்

மணிவண்ணன் வரதராஜன்,
08ஆம் வட்டாரம்,
சிவன்கோயில் ஒழுங்கை,
மந்துவில்,
புதுக்குடியிருப்பு.
எதிராளி

### இடைக்காலத் தீர்வை

2003 ஆம் ஆண்டு மாசி மாதம் 25ஆம் திகதி தமிழீழ மாவட்ட மன்றின் நீதியாளர் திரு. அஇனியவன் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சட்டவாளரும் சமுகமாயிருக்க எதிராளிக்கு அவரின் தாயாருடாக அழைப்புக் கட்டளை சேர்ப்பித்தும் எதிராளியோ, உரித்துடையோரோ எந்தவித நடவடிக்கையினையும் மேற்கொள்ளாமையினால் ஒருமுகமாக விளங்கப்பட்டு கீழ் கண்டவாறு இடைக்காலத்தீர்வை வழங்கப்பட்டது.

இதன்படி வழக்காளிக்கும், எதிராளிக்கும் 2000ஆம் ஆண்டு யூன் மாதம் 28ஆம் திகதி நடைபெற்ற திருமணப்பதிவை ரத்துச் செய்து வழக்காளியும், எதிராளியும் திருமணத்திற்கு முன்னிருந்த நிலையை அடைவார்கள் என்றும் எதிராளி வழக்காளியின் குழந்தைக்கு ரூபா 75,000/- பணத்தினை நிரந்தர வைப்பிலிட வேண்டும் என்றும் உரிமைக்கோரிக்கையின் 2ஆம் பந்தியில் கோரிய நிவாரணமான வழக்குச் செலவுடன் மன்று இடைக்காலத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதன்படி தீர்வையாகப் பதியப்படுகின்றது.

இவ் இடைக்காலத்தீர்வை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து 21 நாட்களுக்குள் எதிராளியோ உரித்துடையோரோ மன்றில் தோன்றி நடவடிக்கைமேற்கொள்ளவும். தவறும் பட்சத்தில் குறித்த இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

"மன்றின் கட்டளைப்படி"

வரைவு,
சி.துஜிதா
வழ/சட்டவாளர்

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
முல்லைத்தீவு.

(3010)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Pentiuam - 4 Computer, Parasonic V.CD/ A.C.D. Player உண்டு. தொடர்பு களுக்கு: தங்கமாளிகை, யாழ் சாலை கிளிநொச்சி. (3007)

### தவறிவிட்டது

சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி என்பருடைய தேசிய அடையாள அட்டையும் வைத்திய கோவை அறிமுக அட்டையும் 08.03.2003 அன்று கிளிநொச்சிக்கும் புளியம் பொக்கணை சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். (3010)

## பொதுக்கூட்டம்

2003ஆம் ஆண்டு புதிய நடைமுறைகள் தொடர்பாக ஆய்வுகள் செய்ய, வரும் 20-03-2003 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு கிளிநொச்சி வாடகை உரிமையாளர் கழக பணிமனையில் பொதுக்கூட்டம் நடைபெறும். எனவே, உறுப்புரிமை பெற்ற உரிமையாளரும், உறுப்புரிமை பெறாது வாடகைப் பணியில் ஈடுபடும் உரிமையாளரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்,
வாடகை இருசில்லு உந்துருளி,
உரிமையாளர் கழகம்,
வன்னி.

(3013)

## வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கம்
## NORTHERN REGION CIGARS PRODUCERS ASSOCIATION

(பதிவு எண் 4629)

"ஒற்றுமையே உயர்ச்சி தரும்"

வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கத்தில் 05.03.2003 இல் நடைபெற்ற கூட்டத்தில் 1000 சுருட்டுக்கள் சுருட்டுவதற்கு 02.04.2003 தொடக்கம் ரூபா 350/- சம்பளம் வழங்குவதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

த.குணரட்ணம்
செயலாளர்.

S.S.சச்சிதானந்தசிவம்
தலைவர்.

உப்புமடம் சந்தி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(2801)

## 30ஆம் நாள் நினைவஞ்சலி

### திரு கதிர்வேல் – சிவகுருநாதன்

உதிர்வு
09-02-2003

அன்பின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் இருப்பிடமாய் திகழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்த எமது கிளைக் குழுவின் உப தலைவர் திரு. கதிரவேல் சிவகுருநாதன் 09-02-2003 அன்று காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தாருக்கும் ஆறுதலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,
அங்கத்தவர்கள், கிளை இல.01,
சிலையடி, ப.தெ.வ. ஆ. கூ. ச.

அமரர் கதிரவேலு சிலையடி
கச்சிலைமடு,

(2802)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை – சின்னத்துரை

வாதரவத்தை புத்தூரைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் ஊரெழு, உரும்பிராய், கோப்பாய், இருபாலை ஆகிய இடங்களில் கிராமசேவை உத்தியோகத்தராகவும், கோப்பாய், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் ஒரே காலத்தில் கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றியவருமான திரு வேலுப்பிள்ளை சின்னத்துரை அவர்கள் கொழும்பில் காலமானார். இவர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், வேலுப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், இராமலிங்கம், சௌந்தரம் தம்பதியரின் மருமகனும், சுதாஜினி,(ஆசிரியை, ஷாகிரா கல்லூரி, புத்தளம்) சுதர்சன்(இலண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவகுமார்,(ஆசிரியர், ஷாகிராக் கல்லூரி, புத்தளம்) நளாயினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
இ.ஜெய்வேந்திரம் (மருமகன்),
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
முல்லைத்தீவு.

(3011)

# பாதுகாப்புச் சபையில் 2 - வது தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நடத்துவதில் தொடர்ந்தும் இழுபறி!

## பாக்தாத் அருகே விமானத் தாக்குதல்

**ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்டுள்ள ஈராக் தொடர்பான இரண்டாவது தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு எப்போது நடைபெறும் என்பதில் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுகிறது. எனினும் இன்று இத்தீர்மானத்தின்மீதான வாக்கெடுப்பு நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.**

தீர்மானத்தை எப்படியாயினும் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பதில் அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் பெரும் முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளன. இருந்தும் இதற்கு எவ்வளவு நாடு கள் ஆதரவளிக்க முன்வந்துள்ளன என்ற கேள்விக்கு இதுவரை திட்டவட்டமான பதிலை தையும் அவற்றால் கண்டுவிடமுடியவில்லை.

அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து ஸ்பெயினின் துணையுடன் கொண்டு வந்துள்ள மேற்படி தீர்மானமானது, ஈராக் மீதான போருக்கு அங்கீகாரம் கோருவதாகும். அதாவது, ஐ.நா நிபந்தனைகளை 17ம்-திகதிக்கு முன்னதாக ஈராக் நிறைவேற்றத் தவறினால் அதன் மீது யுத்தத்தை மேற்கொள்ள அது வலியுறுத்தி நிற்கின்றது.

எவ்வாறாயினும் தீர்மானம் வெற்றிபெறுமா என்பதில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுவருகின்ற நிலையில் அமெரிக்கா இவ்விடயத்தில் அதிக நம்பிக்கை கொண்டுள்ளது போல் நடந்து கொள்கிறது. அதாவது, தீர்மானம் நிச்சயமாக வெற்றி பெறும் என்று அமெரிக்கா கூறுகிறது.

ஈராக் விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் கொண்டுவரப்படவுள்ள இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு உறுப்பு நாடுகளின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாக அமெரிக்க இராஜாங்க சயலாளர் ஹொலின் பவல் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

எனினும் பிரான்ஸ் தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனைத் தடுக்கும் என்பதையிட்டு ஆச்சரியப்படப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.


இது இவ்வாறிருக்க அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானங்கள் ஈராக்கின் தென்பகுதி மீது தாக்குதல் நடத்தி உள்ளன.

இத்தாக்குதலில் நிலத்திற்குக் கீழ் இருந்த ஐந்து தொலைத் தொடர்பு நிலையங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இத்தாக்குதல் பாக்தாத்தில் இருந்து அறுபது கிலோ மீற்றர் தூரத்தில் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகள் இத்தாக்குதலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு முன்னதாக ஈராக்கிய படையினர் நிலத்தில் இருந்து செலுத்தப்படும் ஏவுகணைகளைக் கொண்டு அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் உளவு விமானங்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சித்தார்கள் என்றும் இதனை அடுத்தே இந்த ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.




ஈராக்கியர் ஒருவர் பாக்தாத்தில் தனது வீட்டின் அருகே அமைந்துள்ள நிலவறையைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

## ஈராக் படையணிகளுக்கு அமெரிக்க இராணுவ சீருடை

ஈராக்கின் பாரா இராணுவத் துருப்புக்களுக்கு அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் இராணுவத்தினரின் சீருடைகள் வழங்கப்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதாக அமெரிக்க மத்திய இராணுவக் கட்டளைப்பீடம் தெரிவித்துள்ளது.

ஈராக் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தி அந்தப் பழியை அமெரிக்க, பிரிட்டிஷ் படையினர் மேல் போடுவதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.



உலகின் இரண்டாவது மிகப்பெரிய நடமாடும் தொலைபேசி தயாரிப்பாளர்களான அமெரிக்க 'மோடொரொலா'கம்பனி பொருட்காட்சி ஒன்றில் வைப்பதற்காக மிகப்பெரியளவிலான தொலைபேசிகளை தயாரித்துள்ளமையைக் காண்க.

## பிளேயரின் அமைச்சரவைக்குள் முரண்பாடு; பெண் அமைச்சர் பதவி விலகுவதாக அறிவிப்பு!

### -15 வீத மக்களே போருக்கு ஆதர[illegible]

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையின் இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்படாமல் ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தில் பிரிட்டன் ஈடுபட்டால் தனது பதவியை இராஜினாமச் செய்யப் போவதாகப் பிரிட்டனின் பெண் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரொனிபிளேயர் அரசாங்கத்தில் பதவி வகிக்கும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரான கிளையர்ஸ் கொட் என்பவரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தலைமையிலான ஈராக் மீதான போருக்கு பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயர் ஆதரவு தெரிவித்து வரும் நிலையில் அமைச்சரின் இந்த அறிவிப்பு ரொனி பிளேயருக்கு நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

சர்வதேச சட்டவிதிகளை மீறும் வகையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் அந்த அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் இக்கருத்தினை அடுத்து பிரதமர் [illegible] மேலதிக [illegible] இருக்கின்றார்.

பிரிட்டன் மக்[illegible] இதற்கு எதிர்ப்பு[illegible] கின்றார்கள். பிரிட[illegible] மக்களே ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தை ஆதரிக்கின்றனர்.

## எரிபொருள் தட்டுப்பா[illegible] தவிர்க்க ஒபேக் முன்னே[illegible]

ஈராக் யுத்தம் மூண்டால் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதைத் தடுப்பதற்கு என்ன வகையான முன்னோடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது குறித்து 'ஒபேக்' அமைப்பு நாடுகள் கூடி ஆராய வுள்ளன.

சவூதி அரேபியாவின் தலைமையிலான பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு இன்றும் கூடவுள்ளது.

இதேவேளை எரிபொருள் விநியோகத்தைச் சகல நாடுகளுக்கும் சீராக வழங்கும்வகையில் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என சவூதி அரேபியா கூறியுள்ளது.




## அயோத்தியின் சர்ச்சைக்குரிய பகுதியில் அகழ்வாராய்ச்சி செய்யும் பணி ஆரம்பம்

(புதுடில்லி)

இந்தியாவின் உயர் நீதிமன்ற உத்தரவின்படி இராமஜென்ம பூமி பாபர்மசூதிக்கு உட்பட்ட பகுதியினை அகழ்வாராய்ச்சி செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.இதற்கென இந்திய தொல்பொருள் ஆய்வுக்குழுவின் 12 பேர் கொண்ட குழுவொன்று நேற்று முன்தினம் ஆயோத்தி போய்ச் சேர்ந்தது.

இந்தப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளில் இருந்து தலா ஒரு பிரதிநிதி அகழ்வாராய்ச்சி நடைபெறும் இடத்தில் இருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விடயம் நீதிமன்ற விசாரணையின் கீழ் இருப்பதால் அந்த இடத்திற்குப் பொதுமக்களோ, பத்திரிகையாளர்களோ செல்ல அனுமதிக்கப்படவில்லை. பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப் பட்டுள்ளது.


தொல்பொருள் ஆய்வாளர்களுக்கும் இப்பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அகழ்வாராய்ச்சியில் பயன்படுத்தப்படும் [illegible] களும் பதிவு [illegible] கொண்டுசெல்[illegible] த்தப்படுகின்றன.



இராமர் கோவில் கட்டுமாறு ஆர்ப்பாட்டம் நடத்தும் பக்தர்களும், இடிக்கப்பட்ட பாபர் மசூதியும்.

# சமாதானச் சூழலில் மாணவரின் கல்வி நிலையில்

## படிப்படியான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன



**இராணுவ நடவடிக்கைகளால் அழிவுற்ற கட்டடங்களை கட்டலாம். உபகரணங்களை நிறைய வாங்கலாம். ஆனால் மாணவர்கள் மத்தியிலே ஏற்பட்டுள்ள தாக்கங்கள் பாரிய அளவினதாகும். இவ்வாறு கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் கூறினார்.**

**அவருடனான நேர்காணலைக் கீழே தருகிறோம்.**

**❖ கிளிநொச்சி மாவட்டத்தில் எத்தனை பாடசாலைகள் உள்ளன. அதில் எத்தனை இயங்கிக் கொண்டு இருக்கின்றன?**

கிளி. மாவட்டத்தில் மொத்தமாக 94 பாடசாலைகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. பூநகரியில் இரண்டு பாடசாலைகளும் பளைக் கல்விக் கோட்டத்திலே இராணுவத்தின் எல்லைக்குட்பட்ட கிளாலி முகமாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த பாடசாலைகளும் இயங்காமல் இருக்கின்றன. இந்தப் பாடசாலைகளும் இயங்கினால் இந்த வலயத்திலே 100 பாடசாலைகள் இயங்கும்.

மேலும் பல இடங்களில் மக்கள் குடியேறிக் கொண்டு இருப்பதனால் அந்த இடங்களிலும் பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டிய தேவை எங்களுக்கு உண்டு. இந்த வகையில் இப்பொழுது ஆனையிறவுப் பகுதியில் பாடசாலையை ஆரம்பிக்கவேண்டும், கிளிநொச்சி நகரிலுள்ள, அம்பாள் நகரிலே பாடசாலையை ஆரம்பிக்க வேண்டும். பூநகரியிலே மூன்று பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டிய தேவையும் உண்டு. அதே நேரம் இந்த பாடசாலைகளை ஆரம்பித்தால் இந்த பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் தேவை. எங்களுடைய மாவட்டத்திலே ஆசிரியர்கள் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாகவுள்ளது. இந்த 94 பாடசாலைகளில் ஆகக் குறைந்தது. 1600 நிரந்தர ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற நேரத்திலே ஏறத்தாழ 700 ஆசிரியர்கள் மட்டுமே பணியாற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். அண்மையிலே விடுவிக்கப்பட்ட பளைக் கோட்டத்தில் கூட எங்களுக்கு 13 பாடசாலைகளுக்கு 138 ஆசிரியர்கள் தேவையான நேரத்திலே 72 ஆசிரியர்கள் மட்டும் பணியாற்றிக் கொண்டு இருக்கின்றனர்.

**❖ இராணுவ நடவடிக்கையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் எத்தனை பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன?**

பளைக் கோட்டம் எங்களுடன் இணைக்கப்படுவதற்கு முதல் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்தவற்றில் 57 பாடசாலைகள் இராணுவத்தினால் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டன. முக்கியமாக கிளிநொச்சி நகரிலே, கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம். பெண்கள் திரேசா கல்லூரி, கனகபுரம் வித்தியாலயம் போன்ற 1000இற்கு மேற்பட்ட மாணவர்கள்

நேர்காணல் **அமலன்**

கற்றுக் கொண்டு இருந்த பாடசாலைகள் உட்பட 57 பாடசாலைகள் முற்று முழுதாக அழிக்கப்பட்டன. பளைப் பிரதேசத்திலே 13 பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டன. தற் போது அங்கே தற்காலிகக் கொட்டில்களை அமைத்து கல்வியை கற்பித்துக் கொண்டு இருக்கின்றனர்.

இன்று இந்த சமாதானத்திற்கு பின்பு பல்வேறு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் எல்லாம் பண உதவி செய்ய முன்வந்தாலும் தற்போது நிலவுகின்ற தொழிலாளர் தட்டுப்பாடு எம்மைப் பாதிக்கின்ற ஒரு நிலையாக உள்ளது. ஆறு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஒன்று கூடல் மண்டபம், புனித திரேசா பெண்கள் கல்லூரியின் மண்டபம் கூட இன்னும் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கின்ற காரணம் இன்று மேசன் தொழிலாளர்கள் இல்லாமை பெரும் பிரச்சினையாகவுள்ளது.

இவற்றைவிட கிளிநொச்சி மாவட்டத்திலே 94 பாடசாலைகள் இயங்கிக் கொண்டு இருக்கின்ற போதும், ஒரு பொறியியலாளர் கூட இல்லாது உள்ளது. தொழில் நுட்ப உத்தியோகத்தர் மட்டுமே பணியாற்றுகின்றார். இந்த ஆளணிப் பற்றக்குறையும் எமக்கு பெரிய பிரச்சினையாக இருக்கின்றது.

**❖ கிளிநொச்சி மாவட்டத்தில் 57 பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன எனக் கூறுகிறீர்கள், அப்பாடசாலைகள் ஏன் புனரமைக்கப்படாது உள்ளன? இதற்கு நிதிப் பற்றாக்குறையுள்ளதா?**

சமாதானம் ஏற்பட்டதற்குப் பிற்பாடு அரசாங்கம் கல்வி அமைச்சினூடாக எங்களிடம் பல திட்டங்களைக் கேட்டார்கள். குறுகிய காலத்திட்டம் என்று இது ஆறு மாதத்தில் பூர்த்தி செய்தல் திட்டம், இரண்டு வருடத்திற்கு உள்ளே பூர்த்தி செய்கின்ற திட்டம், நீண்டகாலத்திற்கான திட்டம் எனப் பல. எம்மைப் பொறுத்தவரையிலே ஒவ்வொரு பாடசாலைகளிலும் செய்யப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாக 2008 ஆண்டு வரையான திட்டங்களை நாங்கள் சமர்ப்பிக்க இருக்கின்றோம். ஆனால் யப்பானிலே நடக்க இருக்கின்ற இலங்கைக்கு உதவி வழங்குகின்ற நாடுகளின் கூட்டத்திலே நிதி ஒதுக்கப்பட்ட பிற்பாடு இந்த நிதிகள் எமக்குக் கிடைக்கும் என்ற காரணத்தினாலே போதிய அளவு நிதி எமக்கு இன்று வரை வந்து சேரவில்லை. அவ்வாறு நிதி கிடைக்கும் என்ற விடயங்களைக் கூட விசேடமாக நிக்கோட் திட்டத்தின் கீழே ஏற்கனவே எங்களுக்கு நான்கு பாடசாலைகளில் இரண்டு மாடிக் கட்டடத்தைக் கட்டுவதற்கு அனுமதி கிடைத்தது. இதற்கான கேள்விப் பத்திரங்களை மூன்று முறை விட வேண்டிய தேவை ஏற்பட்டது. ஏனென்றால் இங்கு நாளாந்தம் ஏற்பட்டுவருகின்ற தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு காரணமாகவும் இந்தப் பிரதேசத்தில் வேலை செய்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் விண்ணப்பிக்காத காரணத்தினாலும் இப்பாடசாலைகளின் வேலைத் திட்டங்கள் தாமதம் அடைந்த நிலையிலேயே உள்ளன.

அதே நேரத்திலே பாடசாலைகளில் யுனிசெவ் நிறுவனமும் போரூட் நிறுவனமும் கியூடெக் நிறுவனமும். சிறிய திருத்த வேலைத் திட்டங்களை பூர்த்தி செய்யக் கூடியதாகவுள்ளன.

பாரிய புனரமைப்பு வேலைகளுக்கான அனுமதிகள் பெரும்பாலும் யூன் மாதத்திற்குப் பிற்பாடு எமக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு கிடைக்கும் போதும் நிதி போதிய அளவில் கிடைத்தால் வேலைகளை விரைவாகச் செய்து முடிப்பதற்குத் தொழிலாளர் தட்டுப்பாடு பாரிய பிரச்சினையாகவுள்ளது. ஆகவே இந்தத் தொழிலாளர்களைத் தேடிப்பிடிப்பது என்பது ஒரு பிரச்சினையாகவுள்ளது. எனினும் தற்போது உள்ள சமாதானச் சூழ்நிலை தொடர்ந்து நீடித்து வருமாக இருந்தால் இரண்டு வருடகாலத்திற்குள் ஏறத்தாழ 2004 ஆண்டுக்குள் சகல பாடசாலைகளையும் மாணவர்கள் இருந்து கற்கக் கூடிய வசதிகளுடன் பூர்த்தி செய்துவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கும் எனது கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் உண்டு.

**❖ இராணுவ நடவடிக்கையின் போது பாடசாலைகளுக்கு ஏற்பட்ட மொத்தச் சொத்தழிவு பற்றி தெரிவிப்பீர்களா?**

எங்களுடைய 57 பாடசாலைகளில், கட்டடங்கள், தளபாடங்கள், உபகரணங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள் உட்பட ஏறத்தாழ 4000 மில்லியன் ரூபாய் சொத்தழிவாக நாங்கள் மதிப்பீடு செய்துள்ளோம். ஆனால் இந்த மதிப்பீட்டில் ஒரு தவறு உண்டு. என்னவென்றால் அப்போது இருந்த விலைப் பெறுமானத்தில் கணிக்கப்பட்டது. ஆனால் இன்று அவற்றுக்கு ஏற்பட்டுள்ள விலை மாற்றங்களில் தற்போது நாங்கள் மதிப்பிட்டால் ஏறத்தாழ 5000 மில்லியன் ரூபாய் வரும். இதனை கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதமாக நாங்கள் கணிக்கின்றோம்.

**❖ இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட இடப்பெயர்வினால் மாணவர்களின் கல்வி வளர்ச்சி எவ்வாறாக பாதிக்கப்பட்டுள்ளது?**

இந்த இராணுவ நடவடிக்கையால் அழிவுற்ற கட்டடங்களைக் கட்டலாம், உபகரணங்களை நிறைய வாங்கலாம். ஆனால் மாணவர்கள் மத்தியிலே ஏற்பட்டுள்ள தாக்கங்கள் பாரிய அளவினதாகும்.

சாதாரணமாக நூறு மாணவர்களை எடுத்து நாங்கள் ஆய்வு செய்கின்ற போது, அதில் 65 மாணவர்கள் ஏதோ ஒரு வகையில் உளவியல் ரீதியாகப் பாதிக்கப் பட்டிருப்பார்கள். இதில் அவர்களின் குடும்பத்தில் சகோதரர்களை இழந்திருப்பார்கள். இந்த இடப்பெயர்வினாலே பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடசாலைகள் இடம்பெயர்ந்த போது மாணவர்கள் ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்குள்ளே பல பாடசாலைகளிலும், பல ஆசிரியர்களிடமும் கற்கவேண்டிய நிலை இருந்தது. இதேபோன்று கற்ற பாடசாலையில் தாம் வைத்திருந்த புத்தகங்கள், உபகரணங்கள் யாவற்றையும் இழந்து இன்னொரு இடத்திற்குச் செல்கின்றபோது அவர்கள் அவற்றைப் புதிதாக வாங்கினாலும் அவர்களுடைய மனங்களிலே ஏற்பட்ட தாக்கங்களை மாற்றுவது மிக கஷ்ரமான ஒரு பணி. இந்தவகையிலே இந்த மாவட்டத்தில் யுத்தத்தினால் ஏற்பட்ட சேதத்தின் பணப்பெறுமதியை மதிப்பதைப் பார்க்க அவர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட தாக்கங்கள் அளப்பரியது.

அவற்றைவிட இன்னும் ஒருவகையிலே அவர்களுக்குக் கல்வி போதித்து வந்த ஆசிரியர்கள், அதிபர்கள் மத்தியில் ஏற்பட்ட மனப்பிரச்சினைகள், குடும்பத்தில் ஏற்பட்ட தாக்கங்கள், இடம்பெயர்வினால் ஏற்பட்ட கஷ்ரங்கள் அவர்களின் கல்வியிலே பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை உண்மை.

**❖ சமாதான சூழ்நிலைக்குப் பின்பு, தற்போது மாணவர்களின் கல்வியில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா?**

தற்போதைய சமாதான சூழ்நிலை ஏற்பட்ட பின் அவர்களின் மனங்களிலே சற்று மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அதேநேரத்தில் இந்த யுத்தத்தினாலே அவர்கள் இழந்த சொத்துக்கள் எல்லாவற்றையும் மீட்டுக்கொண்டுவருவது ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. இந்த மாவட்டத்திலே பெரும்பாலான பெற்றோர் மிக வறுமையான சூழ்நிலையில் இருப்பதனாலே தங்களுடைய குழந்தைகள் கல்வி கற்பதைப் பார்க்க சிறுதொழில்களைச் செய்து சம்பாதித்தால் தங்களுடைய வாழ்க்கை சீராக இருக்கும் என்று கருதி, பல பெற்றார்கள் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புகின்ற விதத்திலும் சில குறைபாடுகளை நாங்கள் காணுகின்றோம். அந்தப் பெற்றார்களை அணுகி உரையாடும் போது அவர்களின் குடும்பத்தில் ஏற்பட்ட வறுமையின் சுமையே இம்மாணவர்களை மறிப்பதற்கு காரணமாக அமைந்தது தெரியவந்தது. ஆகவே அவர்கள் ஒரு இயல்பான வாழ்க்கைக்கு திரும்புகின்ற சூழ்நிலை இன்னும் இரண்டு வருடங்களின் பின் தான் நாங்கள் முழுமையாக அறியக் கூடியதாக இருக்கும். கடந்த ஒரு வருடத்திற்கு முதல் மாணவர்களிடம் இருந்த மனநிலை இந்த ஒரு வருடத்தின் பின் சற்று அவர்களுக்குத் தென்பாகவும் உற்சாகம் அளிப்பதாகவும் பாடசாலைக்கு வருகை தருகின்ற தொகையிலும் மாற்றம் ஏற்பட்டு இருப்பதை நாங்கள் காணக்கூடியதாகவுள்ளது.

**❖ தற்போது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அதற்கு நிரந்தர ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவிவருகின்ற நிலையில் தொண்டர் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகள் எந்த அளவில் மாணவர்களைச் சென்றடைகின்றன?**



கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தொண்டர் ஆசிரியர்கள், நிரந்தர ஆசிரியர்களுடன் இணைந்து விசுவாசமாக மிகக்கடுமையாக உழைத்து வருகின்றார்கள். அவர்களில் பலருக்கு எந்த விதமான ஊதியங்களும் கிடைப்பதில்லை. ஒருசில ஆசிரியர்களுக்கு மட்டும் 500ரூபா கொடுப்பனவு ஒரு மாதத்திலே வழங்கப்


(5ஆம் பக்கம் பார்க்க)

# வலையமைப்பு

அறிவியல் உலகம்

சி. சிவபாலன்


பல்வேறு வகையான சேமிப்பகங்கள் நினைவகங்கள் அவற்றின் வேறுபாடுகள் செயற்பாடுகள் பற்றி கடந்த வாரங்களில் பார்த்தோம். இவற்றிலே சேமிப்பகங்கள் தரவுகள், தகவல்களைச் சேமித்துவைத்து எமக்குத் தேவையான வேளையில் பயன்படுத்திக் கொள்ள உபயோகமானதாக இருக்கின்றன. இச்சேமிப்பகங்களின் கொள்ளளவை அதிகரிக்கும் முயற்சி தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. உண்மையில் கணினியின் உச்சப்பயன்பாடு அதன் சேமிப்பகத்திலுள்ள தரவுகள் தகவல்களின் அளவிலேயே தங்கியுள்ளது எனலாம். எனவே இவ்வாறு சேமிப்பகங்களைக் கொண்டுள்ள கணினிகளை இணைத்து ஒரு கணினிக்கு பல கணினிகளிலிருந்து தகவல்களைப் பரிமாற முடியுமானால்




அதன் பயனானது மிகவும் பாரியளவிலானதாக இருக்கும். இவ்வாறானதொரு செயற்பாட்டை வலையமைப்பு என அழைப்பர். அதாவது, பலகணினிகளை ஒன்றுடன் ஒன்று இணைத்தலை வலையமைப்பு (Net work) என அழைப்பர். இவ்வாறு வலையமைப்பின் மூலம் கணினிகள் இணைக்கப்பட்டாலும் அவை ஒன்றையொன்று கட்டுப்படுத்தாத சுயமான இயக்கத்தைக் கொண்டிருக்கும். இவ்வாறு கணினிகள் வலையமைப்பின் மூலம் இணைக்கப்படுவதால் நினைவகத்திற்கு செலவிடும் பணம் மீதப்படுத்தப்படும். அதேவேளை ஒரே தரவுகளை பல கணினிகளுக்கு உள்ளீடு செய்ய வேண்டிய தேவையை இல்லாதொழிக்கிறது. வலயமைப்பு மூலம் தரவுகள் பரிமாறிக்கொள்ளப்படுவதால் இந்நன்மை கிடைக்கிறது. கணினிகள் பல்வேறு வகையான முறைகளில் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படுகின்றன.

### 1 இடத்துரி வலையமைப்பு (Local Area Network-LAN)

ஒரு குறிப்பிட்டபிரதேசத்திற்குள் குறுகிய தூரத்திற்குள் உள்ள பலகணினிகளை ஒரு வலையமைப்பிற்கூடாக இணைக்கும் போது அது இடத்துரி வலையமைப்பு (LAN) என அழைக்கப்படுகிறது. இதன் போது வழமையாக சுமார் 20 கணினிகள் வரை இணைக்கப்படலாம். இதனை விட அதிகமான கணினிகள் இணைக்கப்படும் சந்தர்ப்பங்களும்




உண்டு.

### 2 பெரும்பரப்பு வலையமைப்பு (Wide Area Network - WAN)

இரண்டுக்கு மேற்பட்ட பிரதேசங்களிலுள்ள கணினிகளை அல்லது கணினித் தொகுதிகளை ஒன்றுடன் ஒன்று இணைத்தலை பெரும் பரப்பு வலையமைப்பு (WAN) என அழைப்பர். இவ்விணைப்பானது தொலைபேசி இணைப்புமூலம் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள கணினிகளை இணைக்கின்றது. உதாரணமாக ஒரு நிறுவனமானது அமெரிக்காவிலும், ஜப்பானிலுமுள்ள கணினிகளை WAN மூலம் இணைக்கமுடியும். இங்கு ஒரே இளையிலுள்ள பல கணினிகள் LAN மூலம் இணைக்கப்பட்டிருக்கலாம். எனவே இவ்வலையமைப்பின் மூலம் ஆயிரக்கணக்கான கணினிகளிடையே இணைப்பை ஏற்படுத்தி தகவல்ப் பரிமாற்றம் செய்து கொள்ளமுடியும்.

இதேவேளை கணினியில் இவ்வாறு தகவல் பரிமாற்றத்துக்காக இணைக்கப்படும் போது இத்தகவல்கள் கடத்தப் படுகின்ற பாதைகளின் அடிப்படையில் வடிவமைப்பில் வெவ்வேறு விதமாக இணைக்கப் படுகின்றன. இடத்துரி வலையமைப்பில் (LAN) பல்வேறு வகையான முறையில் கணினிகள் இணைக் கப்படுகின்றன. அவற்றில் சில வருமாறு

#### புள்ளியிலிருந்து புள்ளி இடத்தியல் (Point-to-Point Topology)


இது மிகவும் எளிமையான இணைப்பு முறையாகும் தொடரான இணைப்பாக இருக்கும்.

#### நட்சத்திர இடத்தியல் (Star Topology)

இதில் நட்சத்திர வடிவில் கணினிகள் இணைக்கப் படுகின்றது. இதில் ஒவ்வொரு கணினியும் பிரதான கணினியுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

#### வளைய இடத்தியல் (Ring Topology)

இங்கு வளைய வடிவில் கணினிகள் இணைக்கப் படுகின்றன. இங்கு கணினிகளுக்கு இடையேயான தகவல்கள் ஒரே பாதையினூடாக கடத்தப்படுகின்றன. மூடப்பட்ட சுற்றாக இது காணப்படுகிறது.




#### பாதை இடத்தியல் (Bus Topology)

பல எண்ணிக்கையான கிளைகளைக் கொண்ட அமைப்பினை உடையது. இந்தக் கிளைகளின் ஒவ்வொரு முனையிலும் ஒவ்வொரு கருவி இணைக்கப்பட்டிருக்கும். ஒரு பாதையினூடாக தகவல்கள் பரிமாறப்படுகின்றன.

இவற்றை விடவும் பல வகையான இணைப்பு முறைகள் உள்ளன. இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளைப் பயன்படுத்தியும் கணினிகளிடையே இணைப்புகளை ஏற்படுத்தமுடியும்.

❑❑❑

---

## சமாதான......

படுகின்றன. அவர்களின் பாடசாலை நாட்கள் 20-25 ஆக இருந்தால் சாதாரணமாக அவர்களுக்கு ஒரு நாளைக்கு 20 ரூபாய்தான் கிடைக்கும். ஆனால் அவர்கள் அவற்றைப் பெரிதாகப் பொருட்படுத்தாமல் தங்களுக்கு எதிர்காலத்தில் நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடும், அர்ப்பணிப்போடும் பங்காற்றி வந்தார்கள். ஆனால் தற்போது இந்த அரசாங்கத்தின் வாக்குறுதிகள் மீறப்பட்ட தன் காரணமாக எதிர் காலத்திலே அவர்களால் வழங்கப்படுகின்ற கல்வியில் ஒரு பாதிப்பு ஏற்படும் என்றே நான் கருதுகிறேன்.

❖ **மாணவர்கள் விளையாட்டுத்துறையில் தற்போது எந்த அளவில் உள்ளனர்?**

தற்போது நாங்கள் விளையாட்டுத்துறையில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளோம். அதற்கான காரணம் எங்களுடைய தமிழ் மாணவர்கள் வவுனியாவுக்கு அப்பால் சிங்களப்பிரதேசங்களுக்குச் செல்கின்ற பிரச்சினைகளும், பாஸ் அனுமதி நடைமுறை காரணமாகவும் கடந்த வருடம் ஓரளவு நீக்கப்பட்டதற்கு பிற்பாடு எங்களுடைய மாவட்ட மாணவர்கள் வெளியே செல்லக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இந்த வகையிலே எங்களுடைய மாணவர்கள் உடற்பயிற்சித் துறையிலும் மெய்வன்மைப் போட்டிகளிலும் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்கள்.

இதன் மூலம் எங்களுடைய மாணவர்களின் திறமை அகில இலங்கையிலும் உணரப்படக்கூடியதாக இருந்தது. இந்த நிலையே இவ்வருடமும் இருக்கும் என்ற காரணத் தால் இன்று விளையாட்டுத்துறையிலே மாணவர்கள் மத்தியில் மிகுந்த உற்சாகம் ஏற்பட்டு இருக்கிறது. இந்த உற்சாகத்தை பூர்த்தி செய்வதற்கு எங்களுடைய தொண்டர் ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை மாவட்டப்பிரச்சினையாக மாறியிருக்கிறது. அதே நேரம் மாணவர்கள் உற்சாகமாக விளையாட வேண்டும் இம்முறை கிளிநொச்சி மத்தியவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் விளையாட்டுப் போட்டியைப் பார்வையிட்டதால் தற்போது விளையாட்டுத் துறையிலும் ஆர்வம் அதிகரித்துள்ளதைக் காணமுடிகிறது. இனி நடைபெறப்போகும் மாவட்ட மட்டப் போட்டிகளுக்கும் சென்று வெற்றியீட்டுவார்கள் என நாங்கள் எதிர்பார்க் கின்றோம்.

❖ **வன்னிப்பிராந்தியத்தில் பல பாடசாலைகள் தரமுயர்த்தப்படாமல் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயம் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

உண்மையிலேயே பாடசாலைகளின் தரமுயர்த்தல் என்பது தரம் 5வரை உள்ள பாடசாலைகள் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களும் அதேபோல் O/L பாடசாலை A/L பாடசாலைகளாக தரம் உயர்த்த வேண்டும் இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாடசாலைகள் உள்ளன. இவ்வாறு தரம் உயர்த்துவதற்கு ஆசிரியர் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் பாடசாலைகளை தரமுயர்த்தியும் அந்த பாடசாலைகளில் மேலதிக வகுப்புக்களை வைத்த பின்பும் அந்த வகுப்புக்களில் கற்பித்தலை நடத்துவதற்கு ஆசிரியர்களை நாங்கள் கொடுக்கவில்லை என்றால் அந்த மாணவர்கள் தாங்கள் ஏற்கனவே படித்த பாடசாலைகளிலும் கல்வியை கற்கமுடியாமல் புதிய பாடசாலைகளிலும் கல்வியைக் கற்க முடியாமல் போகின்ற ஒரு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நாங்கள் பல பாடசாலைகளைத் தரமுயர்த்த முடியாமல் இருக்கின்றோம், தென்பகுதியிலே சிங்கள ஆசிரியர்கள் தேவைக்கு மேலதிகமாக 20 வீதமான ஆசிரியர்கள் பணியாற்றிக்கொண்டு இருக்கின்றார்கள். வடகிழக்கு மாகாணத்தில் கூட சிங்கள ஆசிரியர் களின் தொகை தேவைக்கு அதிகமாக உள்ளது. இதே நேரத்தில் வடக்கு - கிழக்கு எங்களுடைய பிரதேசங்கள் ஏறத்தாள 6000ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருக்கின் றன. கிளி/ வலயத்தில் 600இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பற் றாக்குறை உள்ள காரணத்தினாலும் இந்தப் பாடசாலைகளைத் தரமுயர்த்த முடியாத நிலைக்கு நாங்கள் தள்ளப்பட் டுள்ளோம்.

❖ **பலவருடங்களாகப் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வரவில்லை இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

தளபாடங்களின் வாழ்க்கைக்காலம் 10 வருடங்களாகும். எங்களது கிளிநொச்சி மாவட்டத்தில் 1991 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு அரசாங்கம் தளபாடங்கள் எவற்றையும் அனுப்பவில்லை. அவ்வாறு பார்த்தால் 12 வருடகாலம் முடிந்தும் தற்போது எங்களது மாவட்டத்திலே 75 வீதமான தளபாடப்பற்றாக்குறையுள்ளது. அதேநேரத்தில் நிக்கோட் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு பெருந்தொகையிலான தளபாடங்களைத் தரவுள்ளது. இவ்வருடம் இதுவரை 500 மேசை, கதிரைகளை அவ் அமைப்பு வழங்கியுள்ளது. இந்த வருடம் டிசம்பர் மாதத்திற்கு முதல் 75 வீதமான தேவையை பூர்த்தி செய்யவுள்ளது என்று நாங்கள் நினைக்கின்றோம். தளபாடங்கள் கிடைக்காததற்குப் பலகாரணங்கள் உள்ளன. இரும்புப் பொருட்களுக்கு அரசாங்கம் விதித்த தடை, எங்கள் மாவட்டத்தில் உள்ள மரங்களை அழித்து சிதைத் ததினால் பலகையினைப் பெறமுடியாத நிலை உருவானது. அரசாங்கம் தென்பகுதியில் தளபாடக் கொள்வனவுக்கு அனுமதி தராத நிலையிலும் கடந்த 12 வருடகாலமாக இந்த மாவட்டப் பாடசாலைகளுக்கு புதிதான தளபாடங்கள் எவையும் கிடைக்கவில்லை. ◆

# நெல்லை சந்தைப்படுத்த முடியாது விவசாயிகள் பெரும் நெருக்கடி

## – கூட்டுறவு சங்கங்களும் கொள்வனவில் தயக்கம்

(கண்டாவளை)

**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 2002-2003 பெரும் போக நெல்லைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி வருகின்றனர்.**

கடந்த மாதம் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், விவசாயிகளின் நெல் உற்பத்திச் செலவுகளை ஆராய்ந்து அதற்கேற்ப ஒரு மூடை (70) கிலோ 910 ரூபாவுக்கு கொள்வனவு செய்வ தென்றும், இக்கொள்வனவு ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக நடைபெறும் எனத் தெரிவித்தார். ஆனால் ப.நோ.கூ. சங்கங்கள் நெல் கொள்வனவில் ஆர்வம் காட்டவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். இதே வேளை, சில தனியார் விவசாயிகள் நினைத்த மாதிரி 700 தொடக்கம் 750 ரூபா வரை ஒருமூடை நெல்லை கொள்வனவு செய்கின்றனர்.

இவ்வருடம் என்றுமில்லாத அளவுக்கு அறுவடைக்கு கூலியாட்கள் இல்லாது பல நூறு ஏக்கர் நெல்வயல்கள் அறுவடை செய்ய முடியாது அழிவடையும் நிலையை அடைந்துள்ளன. இக் கூலியாட்கள் தட்டுப்பாட்டால் ஒரு ஏக்கர் நெல் அறுவடை செய்ய 4000 தொடக்கம் 4500 வரை பணம் கொடுக்க வேண்டியுள்ளது. அத்தோடு ஒரு ஏக்கர் சூடு அடிக்க 1200ரூபாய் பணம் கூலியாகக் கொடுக்க வேண்டியுள்ளது. இவ்வளவு தொகைப் பணம் கொடுத்து விவசாயிகள் பெரும் கஷ்டப்பட்டு சூடு அடித்தும் நெல்லை சந்தைப்படுத்த முடியாது பெரும் கடன் சுமையில் பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். (14)

## 2954 பேர் சிகிச்சை

கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய மருந்தக மகப்பேற்று மருத்துவ மனையில் கடந்த மாதம் 2954 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி மருத்துவ மனையில் வெளி நோயாளர் பகுதியில் 2928 பேரும் உள்நோயாளர் பகுதியில் 26 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். அத்தோடு பிறப்பு ஒன்று நிகழ்ந்துள்ளது. (பா)

## கணினிப்பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

(அலுவலகச் செய்தியாளர்)

கிளிநொச்சி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நடாத்தப்பெற்ற கணினிப் பயிற்சி நிறைவு நிகழ்வு மற்றும் சித்தியெய்திய மாணவர்களுக்கான சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் கிளி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமண்டபத்தில் நடைபெற்றது.



கிளிமாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் மற்றும் கிளி மாவட்ட நிர்வாக சேவையைச் சேர்ந்த ராம்கீ ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னாள் றோற்றிக் கழகத் தலைவர் குலசேகரம், டாக்டர் தாமோதரம், டாக்டர் கேவீ.கேதிருலோகமூர்த்தி பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர். ஏ.வீ.கே. மாணிக்கம் ஆகியோர் கலந்து உரை நிகழ்த்தியதுடன் கணினிப் பயிற்சியினை நிறைவு செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ் களும் பரிசில்களும் வழங்கி கௌரவித்தனர். செயலர் க. கணேஸ் நன்றியுரை நிகழ்த்தினார். இறுதியாக காலம் சென்ற முன் னாள் கிளி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவரின் உருவப்படத் தினை கிளி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் திரை நீக்கம் செய்து வைத்தார். (சோ)

## நிலத்தில் புதையுண்ட எறிகணைத் தொகுதி முல்லைத்தீவு நகரில் கண்டுபிடிப்பு!

முல்லைத்தீவு நகரப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைகள் பல கொண்ட தொகுதியொன்று நிலத்தில் புதையுண்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அத்தோடு வெண்புறா மனித நேயக் கண்ணி வெடி அகற்றும் பிரிவுக்கு உடன் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மணற்குடியிருப்புப் பகுதியிலுள்ள அன்ரனி என்பவரின் காணியிலேயே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வீடு கட்டுவதற்காக மண் எடுத்தவேளை இச் செல்கிடங்கு காணப்பட்டதாகவும் உடன் கடற்புலிகளின் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளருக்கு தெரியப்படுத்தியவேளை அவ்விடத்திற்குச் சென்ற அவர் பார்வையிட்ட தோடு எறிகணைகளை வெளியே எடுப்பதற்காக வெண்புறா கண்ணி வெடி அகற்றும் பிரி னருக்குத் தெரியப் படுத்தினார்.

மக்கள் நெருக்கமாக வாழும் இப்பகுதியிலேயே இவ் எறிகணைகள் காணப்படுகின்றன. மக்கள் பெரும் திரளாகச் சென்று இவற்றைப் பார்வையிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (20)

## பாம்புக்கடிக்கு உள்ளாவோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

(கண்டாவளை)

தருமபுரம் வைத்தியசாலையில் அண்மைக் காலங்களில் பாம்புக் கடிக்கு இலக்காகி சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரித்துள்ளது. பாம்புக்கடிக்கு இலக்காவோர் நெல் வயல்களில் அறுவடை செய்யும் சமயங்களிலேயே ஏற்படுவதாகத் தெரியவருகிறது.

கண்டாவளையைச் சேர்ந்த சு. நவரட்ணம் என்ற இளைஞர் நேற்று முன்தினம் பாம்புக்கடிக்கு உள்ளாகி தருமபுரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். இதேவேளை இருதினங்களுக்கு முன்னர் தருமபுரம் 8ம் யூனிற்றை சேர்ந்த கு. சசிகுமார் (வயது-22), முரசுமோட்டையைச் சேர்ந்த வே. ஜெகதீஸ்வரன் (வயது-19) ஆகியோர் பாம்புக்கடிக்கு இலக்காகி சிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர். கடந்த வாரம் இங்கு 11பேர் பாம்புக்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுச் சென்றனர் எனத் தெரியவருகிறது. (14)

## திறனாய்வுப் போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டிகள் கடந்த 7ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஞானம் இல்லம் 369 புள்ளிகளையும், மைக்கல் இல்லம் 313 புள்ளிகளை யும், சியேப்கா இல்லம் 387 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

முல்லைத்தீவு வெட்டுவாய்க்கால் அ.த.க. பாடசாலை வருடாந்த திறனாய்வுப் போட்டி கடந்த 5ஆம் திகதி அதிபர் யோ. மாசிலாமணி தலைமையில் ஆரம்ப மானது. விபுலானந்தர் இல்லம் 347 புள்ளிகளையும் ஞானப்பிரகாசர் இல்லம் 328 புள்ளிகளையும் பெற்றன.

மருதங்கேணி இ.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டி அதிபர் ம. நவநீதமணி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதில் யமுனா இல்லம் 371 புள்ளிகளையும் கங்கை இல்லம் 361 புள்ளிகளையும் காவேரி இல்லம் 314 புள்ளிகளையும் பெற்றன. (20,11)

## கிராமிய வங்கி செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிப்பு

மன்னார் மாவட்டத்தின் மடுப் பிரதேசத்தில் உள்ள முள்ளிக் குளம், கங்காணிக் குளம்,போன்ற கிராமத்து மக்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் கிராமியஅபிவிருத்தி வங்கியினால் வங்கி தொடர்பான ஒன்றுகூடல் இடம் பெற்றது. இதில் விவசாய அமைப்பு, நன்னீர் மீனவர் சங்கம், தேசிய எழுச்சிப் பேரவை போன்ற அமைப்புக்களைச் சேர்ந்தோரும், கிராம மக்களுமாக பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தலைமையுரையினை மடுப்பிரதேச பொருண்மிய இணைப்பாளர் கி.றெமிசியஸ் நிகழ்த்த. தொடர்ந்து மன்னார் மாவட்ட கிராமிய அபிவிருத்தி வங்கி மேலாளர் சி.சத்தியகுமார் சேமிப்புத் தொடர்பாக விளக்கமளித்தார். தொடர்ந்தும் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான தளிர் சேமிப்புக் கணக்கு திறப்பது தொடர்பாகவும். பெற்றோருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இறுதியில் 38 பயனாளிகளுக்கு சாதாரண சேமிப்புக் கணக்கும் திறந்து வைக்கப்பட்டது.

## சமகால கருத்துரை

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்பு கோட்ட இரணைப்பாலை வலயத்தின் ஆனந்தபுரம் அ.த.க. பள்ளியில் கோட்ட மாவீரர் செயற்பாட்டு குழுத்தலைவர் திருமேனி தலைமையில் அண்மையில் சமகாலக் கருத்துரை நிகழ்வு இடம் பெற்றது.

சமகால அரசியல் கருத்துரைகளை ஆனந்தபுரம் அ.த.க.பள்ளி அதிபர், உடையார்கட்டு வலயப் பொறுப்பாளர் இரத்தினம் மாவட்ட அரசியல் துறை நிர்வாகப் பொறுப்பாளர் இசையழகன் ஆகியோர் வழங்கினர். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (19)


## கிளிநொச்சி - உருத்திரபுரம் - பூநகரி - பள்ளிக்குடா பேருந்துப்பணி கிளிநொச்சி - பரந்தன் - பூநகரி - பள்ளிக்குடா பணியாக மாற்றம்

**மேற்படி பணி 12-03-2003 ஆம் நாள் தொடங்கி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனைப் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.**

கிளிநொச்சி – பரந்தன் – பள்ளிக்குடா

நேர ஒழுங்கு,

| கிளிநொச்சி - | பரந்தன் - | குஞ்சுப்பரந்தன் - | தம்பிராய் - | 4ஆம் கட்டை - | பள்ளிக்குடா |
|---|---|---|---|---|---|
| மாலை 03.30 | 03.45 | 04.00 | 04.50 | 05.05 | 05.30 |

பள்ளிக்குடா – பரந்தன் – கிளிநொச்சி

நேர ஒழுங்கு,

| பள்ளிக்குடா - | 4ஆம் கட்டை - | தம்பிராய் - | குஞ்சுப்பரந்தன் - | பரந்தன் - | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.25 | 07.40 | 08.30 | 08.45 | 09.00 |

முகாமையாளர்,
பேருந்துப் பகுதி, கிளிநொச்சி.

(கி-8037)

## சிந்தனைக்கு



இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்குமுறையாலும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 11-03-2003

## அபிவிருத்தியின் பெயரால்

விஞ்ஞான தொழில்நுட்ப, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தியாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தைத்தொடர்ந்து இவ்விஜயம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் மூலம் பிரதமர் ரணில் இந்தியத் தலைவர்களுடன் காணப்பட்ட உடன்பாடுகளின் அமுலாக்கம் பற்றிப் பேச்சுக்களை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல், காங்கேசன்துறைத் துறைமுகப் பகுதியில் மூழ்கடிக் கப்பட்டுள்ள இரண்டு கப்பல்களை இந்தியாவின் உதவியுடன் மீட்டெடுத்தல், பலாலி விமான நிலையப் பகுதிகளை அபிவிருத்தி செய்தல், சனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவுகளில் கடமையாற்றும் படையினருக்கு இந்தியாவின் சிறப்புப் படையான கறுப்புப் பூனை படைமூலம் பயிற்சிகளை வழங்குதல், இந்தியாவிடம் இருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் பாலத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் கூட்டாக அமைத்தல் என்பன தொடர்பான விடயங்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்துவார் என அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் மிலிந்த மொறகொட மேற்கொள்ளும் இவ்விஜயத்திற்கு அரசாங்கத் தரப்பால் பொருளாதார ஒத்துழைப்பு எனப்பொதுவில் அடையாளம் இடப்படினும் அடிப்படையில் இது தனியாகப் பொருளாதார ஒத்துழைப்பின் பாற்பட்டது தானா என்ற கேள்வி எழாமலும் இல்லை. ஏனெனில், இவ் ஒத்துழைப்பில் பொருளாதார அபிவிருத்திக்கும் அப்பாற்பட்ட விதத்தில் காரியங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் நிரம்பவே உண்டு.

முதலில், சனாதிபதி பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவுகளில் கடமையாற்றும் படையினருக்கு இந்தியாவின் சிறப்புப் படையான கறுப்புப் பூனை படைமூலம் பயிற்சி, இந்தியாவிடம் ஆயுதங்களை கொள்வனவு செய்தல் என்பன நேரடியான இராணுவ ஒத்துழைப்பு மற்றும் உதவி என்ற அடிப்படையில் அமையக்கூடியதே. ஆனால், இவை கடந்த காலத்திலும் பெறப்பட்ட உதவியாகவே உள்ளன.

ஆனால், காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல், மூழ்கிய கப்பல்களை மீட்டெடுத்தல் மற்றும் பலாலி விமானத்தளத்தை அபிவிருத்திசெய்தல் போன்ற விடயங்கள் வெளிப்படையாக பொருளாதார அபிவிருத்தி/ஒத்துழைப்பு நடவடிக்கை என்ற ரீதியில் நோக்கப்படுவதாயினும், அடிப்படையில் இவ்விடயத்தில் காட்டப்படும் அக்கறையானது பொருளாதார அபிவிருத்தியுடன் மட்டும் தொடர்புபட்டதொன்றாக நோக்கத் தக்கதல்ல.

அதாவது, காங்கேசன்துறைத் துறைமுகமும், பலாலி விமானத் தளமும் இன்று சிறிலங்கா கடற்படையினதும், விமானப் படையினதும் பயன்பாட்டிலேயே உள்ளவையாகும். இவை இரண்டும் பொது மக்களின் பாவனைக்காகவும், வர்த்தக நோக்கத்திற்காகவும் தற்போதைக்குத் திறந்துவிடும் நோக்கம் சிறிலங்கா அரசிற்கும், அதன் படைத்தரப்பிற்கும் இருக்கும் என்பது சந்தேகமே.

இது வலிந்து கூறப்படும் குற்றச்சாட்டல்ல. அனுபவத்தின் பால் தெரிவிக்கப்படும் அபிப்பிராயமாகும். அதாவது உயர் பாதுகாப்பு வலயம் என்ற ரீதியில் மக்கள் தமது சொந்தக் காணிகளில் குடியேறவே தடைவிதிக்கும் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு வடக்கில் முழு அளவில் இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்திவரும் துறைமுகத்தையும், விமானத் தளத்தையும் மக்களின் பயன்பாட்டிற்கும் - பொருளாதார அபிவிருத்திப் பணிகளுக்கும் பயன்படுத்த அனுமதிக்கும் என்று எவ்வாறு கூறமுடியும்?

சிறிலங்கா அரசைப்பொறுத்து இந்தியாவுடன் நெருக்கமானதொரு இராணுவ ஒத்துழைப்பை மேற்கொள்ளவே அது முனைகின்றது. குறிப்பாக இந்தியக் கடற்படைக்கும் சிறிலங்கா கடற்படைக்கும் இடையில் இவ் ஒத்துழைப்பு அண்மைக் காலத்தில் முனைப்புப் பெற்றதாகவுள்ளது. இந்நிலையில் இந்தியாவிற்கு மிக அண்மையாகவுள்ள துறைமுகம் மற்றும் விமானத்தளம் என்பனவற்றை புனரமைப் பதில் சிறிலங்கா அரசு காட்டும் அக்கறையானது அதன் நோக்கத்தைச் சந்தேகிக்க வைக்கிறது.

சிறிலங்கா அரசாங்கம் சமாதான காலத்திலும் தமது ஆயுதப் படைகளைப் பலப்படுத்தும் நோக்கில் பல்வேறு நாடுகளிடமும் அமைப்புக்களிடமும் இராணுவ உதவிகள்/ஒத்துழைப்புக்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதில் அக்கறை காட்டிவருகின் றமை ஒன்றும் இரகசியமானதல்ல. இந்த வகையில் இந்தியாவிடம் அது பெற்றுக் கொள்வதும் எதிர்பார்க்கக் கூடியதே. ஆனால், அபிவிருத்தியின் பெயரிலும், பொருளாதாரத்தின் பெயரிலும் இராணுவ அனுகூலமான விடயங்களில் அக்கறை காட்டுவது சமாதான முயற்சிகள் மீது சந்தேகத்தைத் தோற்றுவிக்கத்தக்கதாகும்.

# தமிழீழ சமூகக்கல்வியும் வரலாறும் தேர்வு -2002
# தேசிய மட்டத்தில் பரிசு பெறுவோர் விபரம்

| பாடசாலை பெயர் | மாணவர் பெயர் | சுட்டெண் | புள்ளி | நிலை | வலயம் |
|---|---|---|---|---|---|
| **தரம் - 06** | | | | | |
| மு- கலைமகள் வித்தியாலயம் | மெ.விஜிதா | 1059044 | 95 | 1 | முல்லைத்தீவு |
| மு- வலயன்மடம் அ.த.க.பாடசாலை | ம.மனோச்சமில்டன் | 1073003 | 95 | 1 | முல்லைத்தீவு |
| யா- உடுத்துறை ம.வி | ஜெ.தினேஸ் | 1166017 | 94 | 3 | யாழ்ப்பாணம் |
| **தரம் - 07** | | | | | |
| கிளி- பூநகரி ம.வி | உ.அனுராஜ் | 2138007 | 96 | 1 | கிளிநொச்சி |
| மு- கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை | கு.ஆனந்த் | 2087006 | 87 | 2 | முல்லைத்தீவு |
| மு- தண்ணீருற்று இ.த.க.பாடசாலை | யோ.அபிராமி | 2052037 | 82 | 3 | முல்லைத்தீவு |
| **தரம் - 08** | | | | | |
| மு- மாங்குளம் | ப.ஜீவராஜன் | 3187006 | 87 | 1 | துணுக்காய் |
| மு- தண்ணீருற்று சீ.சீ.த.க.பாடசாலை | ம.பார்த்தீபன் | 3052011 | 86 | 2 | முல்லைத்தீவு |
| மு- தண்ணீருற்று சீ.சீ.த.க.பாடசாலை | கு.பிந்துஜா | 3052038 | 86 | 2 | முல்லைத்தீவு |

# தமிழீழ சமூகக்கல்வியும் வரலாறும் தேர்வு -2002
# வலய ரீதியாக சான்றிதலும், பரிசும் பெறுவோர் விபரம்

| பாடசாலை பெயர் | மாணவர் பெயர் | சுட்டெண் | புள்ளி | நிலை | வலயம் |
|---|---|---|---|---|---|
| **தரம் - 06** | | | | | |
| 01. கிளி-கிளிநொச்சி ம.வி | சி.ரஞ்ஜீவன் | 1081001 | 93 | 1 | கிளிநொச்சி |
| 02. கிளி-கிளிநொச்சி ம.வி | யோ.கௌதமன் | 1081039 | 88 | 2 | கிளிநொச்சி |
| 03. கிளி-அக்கராயன் ம.வி | அ.ரேணுகா | 1083038 | 88 | 2 | கிளிநொச்சி |
| 04. மு-வலயன்மடம் அ.த.க.பாடசாலை | சே.நிசாந்தினி | 1073005 | 92 | 1 | முல்லைத்தீவு |
| 05. மு-கலைமகள் வித்தியாலயம் | நி.ருசிக்கா | 1059045 | 92 | 1 | முல்லைத்தீவு |
| 06. மு-வலயன்மடம் அ.த.க.பாடசாலை | த.தயாபரன் | 1073002 | 89 | 3 | முல்லைத்தீவு |
| 07. மன்-இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலை | ம.லக்ஸ்ரெலா | 1001020 | 83 | 1 | மடு |
| 08. மன்-இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலை | ஜீ.ஜீவசுலக்சி | 001016 | 81 | 2 | மடு |
| 09. மன்-பெரியபண்டிவிருச்சான் அ.த.க பாடசாலை | சூ.யோசப்வோஸ்டி சொய்சா | 1014002 | 78 | 3 | மடு |
| 10. மு-மல்லாவி மத்திய கல்லூரி | வி.அனுசியா | 1170046 | 87 | 1 | துணுக்காய் |
| 11. மு-க.பாலிநகர் ம.வி | வி.தர்சிகா | 1182017 | 84 | 2 | துணுக்காய் |
| 12. மு-நட்டாங்கண்டல் வித்தியாலயம் | சூ.ஜெயந்தி | 1182010 | 82 | 3 | துணுக்காய் |
| 13. வ-மாறாஇலுப்பைஅ.த.க.பாடசாலை | தோ.சர்மிளா | 1125011 | 70 | 1 | வவு. வடக்கு |
| 14. வ-விவேகானந்தா வித்தியாலயம் | சௌ.பவிதா | 1027008 | 59 | 2 | வவு. வடக்கு |
| 15. வ-பாரதி வித்தியாலயம் | கு.சுமங்கலி | 1022007 | 53 | 3 | வவு. வடக்கு |
| 16. வ-மருதங்கேணிஇந்துவித்தியாலயம் | செ.தினேஸ்குமார் | | 93 | 1 | வடம. கிழக்கு |
| 17. யா-உடுத்துறை ம.வி | ர.மயூரன் | 1166010 | 88 | 2 | வடம. கிழக்கு |
| 18 யா-உடுத்துறை ம.வி | க.அருள்தீபன் | 1166020 | 83 | 3 | வடம. கிழக்கு |
| **தரம் - 07** | | | | | |
| 1) கிளி-கிளிநொச்சி ம.வி | த.தவக்குமார் | 2081007 | 81.5 | 1. | கிளிநொச்சி |
| 2) கிளி- முழங்காவில் ம.வி | சாமிலி | 2133032 | 79 | 2. | கிளிநொச்சி |
| 3) கிளி-புனிததிரேசா பெண்கள் கல்லூரி | சி.வர்சினி | 2079004 | 77.5 | 3. | கிளிநொச்சி |
| 4) மு.வலயன்மடம் அ.த.க.பாடசாலை | சி.வின்சன்போல் | 2073003 | 81 | 1. | முல்லைத்தீவு |
| 5) மு-செம்மலை ம.வி. | ச.ஜீவனா | 2051019 | 79 | 2. | முல்லைத்தீவு |
| 6) மு-விசுவமடு ம.வி. | ந.கஜந்தினி | 2041020 | 78 | 3. | முல்லைத்தீவு |
| 7) மன்-இலுப்பைக்கடவை அ.த.க பாடசாலை | ச.சுதர்சன் | 2001001 | 75.5 | 1. | மடு |
| 8) மன்-பெரிய பண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலை | ச.சிந்துஜா | 2014014 | 74 | 2. | மடு |
| 9) மன்-இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை | க.ஜீவிதா | 2001017 | 69.5 | 3. | மடு |
| 10) மு-யோகபுரம் ம.வி | து.சியாளி | 2171038 | 76 | 1. | துணுக்காய் |
| 11) மு-அனிச்சியன்குளம் அ.த.கபாடசாலை | சி.சரணியநிதர்சினி | 2174041 | 75 | 2. | துணுக்காய் |
| 12) மு.யோகபுரம் ம.வி. | த.குலலோஜினி | 2171034 | 74 | 3. | துணுக்காய் |
| 13) வ-பாரதி வித்தியாலயம் | ப.சுதர்சன் | 2022005 | 74 | 1. | வவு. வடக்கு |
| 14) வ-பாரதி வித்தியாலயம் | ஆ.ஜெனித்தா | 2022004 | 52 | 2. | வவு. வடக்கு |
| 15) வ-பட்டிருப்பு அ.த.க.பாடசாலை | த.கந்தீபன் | 2031002 | 48 | 3. | வவு. வடக்கு |
| 16) யா-ஆழியவளைசீ.சீ.த.க.பாசாலை | ந.சத்தியா | | 67 | 1 | வட. கிழக்கு |
| 17) யா-வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் | கி.றெஜிப்பரியா | 2164018 | 66 | 2 | வட. கிழக்கு |
| 18) யா-உடுத்துறை ம.வி. | ஜெ.குகெந்தினி | 2166005 | 64 | 3. | வட. கிழக்கு |
| **தரம் - 08** | | | | | |
| 01) கிளி. பூநகரி ம.வி. | ம.ரோகிலன் | 3134003 | 84 | 1 | கிளிநொச்சி |
| 02) கிளி.இந்துக் கல்லூரி | த.சிறி. ஜீவன் | 3078004 | 81 | 2 | கிளிநொச்சி |
| 03) கிளி.கிளிநொச்சி ம.வி. | அ.அனுருத்தன் | 3081024 | 80 | 3 | கிளிநொச்சி |
| 04) மு.கலைமகள் வித்தியாலயம் | க.கோதுறாணி | 3059048 | 82 | 1 | முல்லைத்தீவு |
| 05 மு.முள்ளியவளை அ.த.க.பாடசாலை | சி.அகிலன் | 3065003 | 80 | 2 | முல்லைத்தீவு |
| 06) மு. செம்மலை ம.வி. | ப.மோகன்ராஜ் | 3051007 | 75 | 3 | முல்லைத்தீவு |
| 07) மன்-இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை | தி.ஜீவிதன் | 3001011 | 49 | 1 | மடு |
| 08) மன்.பெரிய பண்டிவிருச்சான் அ.த.க. பாடசாலை | வ.சிறிதேவி | 3014012 | 48 | 2 | மடு |
| 09) மன்.கருங்கண்டல் ம.வி. | செ.டிலக்சனா | 3020008 | 43 | 3 | மடு |
| 11) மு.விநாயகபுரம் வித்தியாலயம் | வி.துஜிவா | | 83 | 1 | துணுக்காய். |
| 12) மு.மல்லாவி மத்திய கல்லூரி | இ.பாமினி | 3170023 | 82 | 2 | துணுக்காய் |
| 13) வ. நெடுங்கேணி ம.வி. | த.தயாபரன் | 3026005 | 70 | 1 | வவு. வடக்கு |
| 14) வ.ஒலுமடு அ.த.க.பாடசாலை | து.திலீப்தரன் | 3028007 | 42 | 2 | வவு. வடக்கு |
| 15) வ.ஓமந்தை மத்திய கல்லூரி | ப.கோகுலன் | 3032010 | 41 | 3 | வவு. வடக்கு |
| 16) யா.உடுத்துறை ம.வி. | தெ.கஸ்தூரி | 3166033 | 81 | 1 | வட. கிழக்கு |
| 17) யா.உடுத்துறை ம.வி. | ர.றோசிகா | 3166041 | 65 | 2 | வட. கிழக்கு |
| 18) யா.மருதங்கேணி இந்து வித்தியாலயம் | சி.ஜீவதாஸ் | 3167021 | 65 | 2 | வட.கிழக்கு (பா) |

தமிழர் வர்த்தக நிலையங்கள் தாக்கப்படலாம்

# சனாதிபதியின் கருத்துக்களுக்கு சட்டத்தரணிகள் கண்டனம்

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றைய ஆர்ப்பாட்ட ஊர்வலம் தொடர்பாக தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு இலங்கை சட்டத்தரணிகள் தேசிய ஆணைக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போர்வையில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் தாக்கப்படலாம் எனவே பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு சனாதிபதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் எழுதியிருந்தார். இந்த ஆர்ப்பாட்டம் எத்தகைய விளைவுக்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்து கொண்டதனால் சனாதிபதி அதனை நிறுத்தியிருக்கலாம் என சட்டத்தரணிகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அவ்வாறு தடுத்து நிறுத்தாததன் மூலம் சனாதிபதி பொறுப்பில்லாதவராக நடந்து கொண்டுள்ளார்.

நேற்று அரசாங்கத்திற்கெதிராக சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பி.யும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியிருந்தது தெரிந்ததே.

## புதிய துணைவேந்தராக பேராசிரியர்மோகனதாஸ்?

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் மோகனதாஸ் நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் பதவிக்காலம் முடிவடைந்தமையடுத்து புதிய துணைவேந்தரைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் முதவையில் நடைபெற்றது. இதில் முதலாவது அதிகப்படியான வாக்குகளை பேராசிரியர் சித்திரவடிவேலும், இரண்டாவது அதிகப் படியான வாக்குகளை பேராசிரியர் சிற்றம்பலமும், மூன்றாவது அதிகப் படியான வாக்குகளை பேராசிரியர் மோகனதாஸும் பெற்றிருந்தனர். இவர்கள் மூவரில் பேராசிரியர் மோகனதாஸையே துணைவேந்தராக சனாதிபதி தெரிவு செய்யவுள்ளதாகத் அறிய வந்துள்ளது.

இது குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல் இன்று வெளியிடப்படலாம் என யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பதிவு செய்க

(அலுவலக செய்தியாளர்)

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் மோட்டார் சயிக்கிள், ஓட்டோ, சிறிய மினிபஸ், மினிபஸ், வான், கார், இயந்திரம் பூட்டிய வள்ளம், இரண்டு சில்லு உழவு இயந்திரம், 4 சில்லு உழவு இயந்திரம், லொறி என்பன வைத்திருப்போர் அவ் வாகனங்களுக்கான பதிவுச் சான்றிதழ்களுடனும், பதிவுச் சான்றிதழ் இல்லாதோர் இருக்கும் விபரங்களுடனும் தத்தம் கிராம உத்தியோகத்தரிடன் பதிவு செய்யுமாறு கோரப்படுகின்றனர். இவ்விபரம் எரிபொருள் விநியோகத்தின் தேவைக்கு வேண்டியுள்ளதால் இன்று பி.ப 6.00 மணிக்கு முன் பதிவுகளைச் செய்யுமாறு பிரதேசச் செயலர் கேட்டுள்ளார். (பா)

## வேதனம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களின் மாதாந்த வேதனம் தற்போது கிளிநொச்சி றம்பியா மைதிலி களஞ்சியத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி களஞ்சியத்தில் வைத்து எதிர்வரும் 16ஆம் திகதி வரை கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான வேதனம் வழங்கப்படவுள்ளதென வேலைப்பகுதி முகாமையாளர் சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார். (சோ)

### பொ.ஐ.முன்னணி...

எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் இதில் உரையாற்றியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் காரணமாக கொழும்பில் பல பாடசாலைகள் மதியம் 12.00 மணியுடன் மூடப்பட்டன. போக்குவரத்துச் சேவைகளும் குறைவாகக் காணப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் போது அசம்பாவிதங் கள் ஏதும் நிகழலாம் என எதிர் பார்க்கப்பட்ட போதும் அவ்வா றான சம்பவங்கள் எதுவும் இடம் பெறவில்லை.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் முன்னால் நூற்றுக் கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் அணிவகுத்துச் செல்ல கட்சித் தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் பின்னால் அணிவகுத்துச் சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் சமாதான முயற்சிக்கு எதிரான கோசங்களை எழுப்பியதுடன் சுலோக அட்டைகளையும் தாங்கிச் சென்றனர்.

இவ் ஆர்ப்பாட்டம் பேரணியில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தின் முடிவில் கொழும்பு மாநகர சபை மைதானத்தில், இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச உள்ளிட்ட பலர் உரை நிகழ்த்தினர்.

### களுத்துறை...

தலை செய்யுமாறு கோரி நேற்று யாழ். அரச செயலகத்திற்கு முன்பாக கண்டி வீதியை ஒரு மணி நேரம் மறித்து போக்குவரத்தையும் தடைசெய்து ஒரு மணித்தியாலயம் மறியல் போராட்டம் இடம்பெற்றுள் ளது.

நேற்றுக் காலை 10.30 மணியில் இருந்து மதியம் 11.30 மணிவரை நீடித்த இந்தப் போராட்டத்திற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் காணாமல் போனோர் சங்கமும் ஏனைய குடா நாட்டில் உள்ள பொது அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டோர் சிறிலங்கா அரசுக்கு எதிரான கோசங்களையும் எழுப்பினர்.

இதேவேளை, களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று பத்தாவது நாளாகத் தொடர்ந்தும் இடம் பெற்றுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 61 கைதிகளில் பலரின் உடல்நிலை கவலைக்கிடமாக மாறியுள்ளதுடன் இவர்களில் ஒருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் மூவர் மயக்கமடைந்த நிலையில் உள்ளதாகவும் கைதிகள் தெரிவித்துள்ளனர்.கைதிகள் பத்து தினங்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் அவர்களது கோரிக்கைக்கு இதுவரை சிறிலங்கா அரசாங்கம் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

எனினும் கைதிகளின் கோரிக்கைக்கு இணங்க தமிழர் தாயகப் பிரதேசங்களில் போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.

### தனது வர்த்தகக்...

இடங்களில் கடந்து நடந்துள்ளது. எமது வர்த்தகக் கப்பலுக்கு தொல்லை கொடுத்து தாக்கியது சட்டத்திற்குப் புறம்பான ஒரு செயலாகும். நாம் சிறிலங்கா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் உடன் தொடர்பு கொண்டு இச்சம்பவம் பற்றி முறையீடு செய்துள்ளோம்.

இக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவசன் சிறிலங்கா கடற்படை அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்பில் நடந்தது என்றும் மேலும் எவ்விதமான அசம்பாவிதமும் நடக்காது என உறுதிகூறினார்.

எங்கள் குழுவில் கப்பல் கப்டன் உட்பட பதினொரு அங்கத்தவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கப்பலும் தீப்பற்றி எரிந்து முற்றாக மூழ்கடிக்கப்பட்டுள்ளது. நாங்கள் மிகவும் கவலையுடன் தெரிவிப்பது இது நமது சமாதான ஒப்பந்தத்தைப் பாதிக்கும் என்பதை பணிவுடன் எடுத்துக்கூற விரும்புகின்றோம். இத்துடன் சிறிலங்கா கடற்படையினர் பல தடவைகளில் சமாதான ஒப்பந்தத்தை மீறியுள்ளார்கள். அத்துடன் விடுதலைப்புலிகளுக்கு சில நேரங்களில் பல தொல்லைகளையும் கொடுமைகளையும் புரிந்துள்ளார்கள் என்பதை ஆணித்தரமாக எடுத்துக்கூற விரும்புகின்றேன். தயவு செய்து இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் எங்கள் ஆழ்ந்த கவலையையும் இச் சம்பவத்தின் கொடூரத்தையும் தங்கள் அரசாங்கத்திற்கு எடுத்துரைக்குமாறு வேண்டுகின்றேன் என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## சிறிலங்காவுடனான போட்டியில் இந்திய அணி வெற்றி

### அரையிறுதிக்குள் இந்தியா நுழைவு

சிறிலங்கா - இந்திய அணிகளுக்கிடையில் ஜோகன்னஸ் பேர்க்கில் நேற்று நிறைவுபெற்ற உலகக் கிண்ண சுப்பர் சிக்ஸ் இரண்டாவது போட்டியில் இந்திய அணி 183 ஓட்டங்களால் பெருவெற்றி பெற்றுள்ளது.



முதலில் ஆடிய இந்திய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் ஆரம்ப ஆட்டக்காரர்களான ஷேவாக்கும், டெண்டுல்கரும் சிறிலங்கா பந்து வீச்சாளர்களைச் சிதறடித்து முதல் விக்கெட்டுக்கு 153 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக டெண்டுல்கர் 97 ஓட்டங்களைப் பெற்றார் ஷேவாக் 66 ஓட்டங்களைப் பெற்றார்.

வெற்றிபெற 293 ஓட்டங்கள் தேவை எனக் களமிறங்கிய சிறிலங்கா அணி 15 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்று தோல்வி உறுதி என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. பின்னர் 23 ஓவரில் 109 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இப்போட்டியில் சிறிலங்கா அணியின் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வேகப்பந்து வீச்சாளர் சிறிநாத் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார்.

மேற்படி வெற்றி மூலம் 16 புள்ளிகளைப் பெற்றுள்ள இந்திய அணி அரையிறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் தகைமையைப் பெற்றுள்ளது.

## வவு.வில் இராணுவச் சிப்பாய் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை

(வவுனியா)

வவுனியாவில் இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

நேற்றுக் காலை வவு. கண்டி வீதியில் நம்மியாகவுசுக்கு முன்பாக இராணுவ ரக் வண்டி ஒன்று அந்த வீதியோரமாகச் சென்று கொண்டிருந்த தபால் அதிபரை மோதி சிறிதுதூரம் சென்று நிறுத்தப்பட்டுள்ளது. அப்போது ரக் வண்டியினால் மோதப்பட்டதபால் அதிபர் மயங்கிய நிலையில் கிடந்துள்ளார். இதனைத் தொடர்ந்து அங்கு விரைந்து சென்ற இராணுவத்தினர் அவரைப் பார்வையிட்டுள்ளனர்.

அவ் ரக் வண்டியை ஓட்டிச் சென்ற இராணுவச் சிப்பாய் தபால் அதிபர் மயங்கியதைப் பார்த்து அவர் இறந்துவிட்டதாகக் கருதி உடனே தன்னைத்தானே சுட்டு தற்கொலைச் செய்துள்ளார்.

### சர்வதேச கடற்பர...

தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தமக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அப்பகுதிக்குச் சென்ற கடற்படை யின் சயிரா யுத்தக் கப்பல் புலிகளின் சரக்குக் கப்பல் மீது தாக்குதல் நடத்தி மூழ்கடித்ததாக சிறிலங்கா கடற்படையின் பேச்சாளர் ஜெயந்த பெரேரா தெரிவித் துள்ளார்.

தாம் கொடுத்த எச்சரிக்கையை விடுதலைப் புலிகளின் கப்பல் சரியான முறையில் கையாளவில்லை எனவும் எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் கப்பல் நகர முற்பட்டபோது அது தாக்கி அழிக்கப்பட்டதாகவும் கடற்படைப் பேச்சாளர் மேலும் கூறினார்.

### பிணையில்...

யில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமையும் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

### இந்திய மீனவ...

ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், சிறிலங்காப் பிரதமர், படைத்துறை அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோருக்கு அனுப்பி வைப்பதற்கான மனுக்கள் மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

### எக்கப்பலுக்கு...

வரமுடியாது. ஏனென்றால் தற்சமயத்தில் நாங்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் சர்வதேச கடற்பரப்பில் உள்ள ஒழுங்கு முறைகள் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஏனென்றால், ஒரு நாட்டிற்கு அதன் கடற்கரையை ஒட்டியுள்ள 12 கடல் மைல்கள் அதனுடைய பாதுகாப்பு எல்லை எனலாம். மற்றொரு விடயம் இந்த பொருளாதார கடற்பரப்பு பற்றி பேசுகையில், இது மீன் பிடிப்பது மற்றும் கடற்கரை ஓரத்தில் உள்ள வளங்களை பயன்படுத்துவது எல்லாக் கப்பல்களுக்கும் அது எங்கிருந்து வந்தாலும் சர்வதேசக் கடற்பரப்பில் சுதந்திரமாகச் செயற்பட உரிமை உண்டு என்றார் ஒக்லண்ட்.

சர்வதேச கடற்பரப்பில் இருதரப்புப் படைகள் பயணம் செய்வது பற்றி போர் நிறுத்த ஒப்பந்தம் ஏதாவது கூறுகின்றதா என்று கேட்டபோது.

சர்வதேச கடற்பரப்பில் கப்பல்கள் அல்லது உறுப்பினர்கள் பற்றி அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எதுவும் சொல்லவேயில்லை. இதில் ஒரு தெளிவற்ற நிலை காணப்படுகின்றது. ஆனால், இவ் ஒப்பந்தமே சர்வதேச சட்டத்தின் கீழ் போடப்பட்ட ஒப்பந்தம் என ஆணித்தரமாகக் கூறலாம். எனவே இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம்கூட சர்வதேசச் சட்டத்தின் கீழ்தான் வருகின்றது என்று கூறலாம் என அதில் கூறப்பட்டுள்ள பல பிரயோகங்கள் எல்லாம் சர்வதேச சட்டம் மற்றும் மரபுகளின் கீழ் வருகின்றது என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.